**செய்தி வெளியீடு எண்: 687** **நாள்: 19.11.2012**

**செய்தி வெளியீடு**

தமிழகத்தில் பண்டைய காலம் முதலே, கலை, இலக்கியம், இசை, பண்பாடு போன்ற கலைகள் போற்றி வளர்க்கப்பட்டு வந்தன. தமிழ் மொழியே இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளைக் கொண்டது. தமிழகத்தை ஆண்ட பண்டைய அரசர்களும் இயல், இசை, நாடகம், நாட்டுப்புறக் கலைகள் மற்றும் பண்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து வந்தனர்.

அத்தகைய தமிழக பண்டைய கலைகளான இயல், இசை, நாடகம், நாட்டுப்புறக் கலைகள் அனைத்தையும் நன்கு பராமரித்து, காப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்த வகையில், சேலம் மாவட்டம், தளவாய் பட்டியில், கலை பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் சேலம் மண்டலத்திற்கான மண்டல உதவி இயக்குநர் அலுவலகம், மாவட்ட அரசு இசைப் பள்ளி, சவகர் சிறுவர் மன்றம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் ஆகியவைகள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கலை பண்பாட்டு மையத்தினை 1 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழக அரசு கலை பண்பாட்டுத் துறையின் கீழ் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய 4 இடங்களில் மாவட்ட அரசு இசைக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த இசைக் கல்லூரிகளில் குரலிசை, புல்லாங்குழல், வீணை, பரதநாட்டியம், வயலின், கடம், கஞ்சிரா, முகர்சிங், நாதஸ்வரம், தவில், மிருதங்கம் மற்றும் நாட்டுப்புற கலைகள் ஆகிய துறைகளில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், இரண்டாண்டு பட்ட மேற்படிப்பும், இசையாசிரியர் பயிற்சியில் ஓராண்டு பட்டயப் படிப்பும் பயிற்றுவிக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தற்பொழுது மாதந்தோறும் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை 250 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் அடிப்படையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருவையாறு ஆகிய 4 இடங்களில் உள்ள அரசு இசைக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகையை 250 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி 10 மாதங்களுக்கு வழங்கப்படும். இதன் மூலம் 691 மாணவ, மாணவியர் பயன் பெறுவார்கள். இதனால் அரசுக்கு 15 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
நாள்: 19.11.2012.